Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.9 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. மருத்துவர் சிவசண்முகம் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் ஜேடர்பாளையத்தில் "சிவசத்தியம்" என்ற தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 16.09.2024ம் தேதி இரவு 9.15 மணியளவில் நான் பணியை முடித்து மருத்துவமனை மாடியிலிருந்த எனது வீட்டிலிருந்த போது, தண்ணீர்பந்தலில் இருந்து ராமலிங்கம் என்பவர் எனக்கு போன் செய்தார். மனோஜ் என்பவர் மயங்கிய நிலைமையில் இருக்கிறார். அவரை சிகிச்சைக்காக கூட்டி வருகிறோம் என்று சொன்னார். இரவு 10 மணியளவில் மனோஜை கூட்டி கொண்டு வந்தார்கள். அவரை நான் ஆஸ்பத்திரிக்குள் கொண்டு வருமாறு சொன்னேன். அவர் காரில் மயக்கமாக இருப்பதாக சொன்னதால் நான் காருக்கு போய் அவரை பார்த்தேன். நான் பரிசோதித்த போது அவருக்கு இருதய துடிப்பு இல்லை. அவர் உடம்பில் வெளிக்காயங்கள் இருந்ததா என்பதை நான் பார்க்கவில்லை. இதயதுடிப்பு, நாடித்துடிப்பு, சுவாசம், கண் விரிவடைதல் ஆகியவற்றை பார்த்தேன். பல்ஸ் இல்லை. பிரஸர் இல்லை. எஸ்பிஓ2 இல்லை. நான் மனோஜை கொண்டு

வந்தவர்களிடம் 90 % நிலவரம் இல்லை என்றும், 10% உயிர் உள்ளது. முயற்சி செய்ய நாமக்கல் GHக்கு கொண்டு போக சொன்னேன். அதன்பிறகு போன் செய்து விசாரித்தபோது, நாமக்கல் எம்.எம்.ஆஸ்பத்திரிக்கு போய்விட்டு GH போனதாகவும், GHல் உள்ள டாக்டர் இறந்துவிட்டதாக சொல்லிவிட்டார்கள் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

போலீசார் என்னை விசாரித்ததை வீடியோவாக பதிவு செய்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. நான் சொன்ன விவரத்தை லேப்டாப்பில் பதிவு செய்தார்கள். வாக்குமூலம் பதிவு செய்ததை என்னிடம் காட்டவில்லை. எனது வாக்குமூலத்தை பதிவு செய்தபோது, வீடியோவில் பதிவு செய்தார்கள் என்றால் கவனிக்கவில்லை. ராமலிங்கம் எனக்கு போன் செய்தபோது, மனோஜ் சிறிய விபத்தில் கீழே விழுந்துவிட்டதாகவும், Serious–ஆக இருப்பது போல தெரிகிறது கூட்டிட்டு வரலாமா? என்று சொன்னாரா என்றால் சரியல்ல. நான் அவர்களிடம் விபத்து என்று சொன்னீர்கள். ஆனால் மனோஜ் உடம்பில் எந்த காயமும் இல்லையே என்று நான் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு ராமலிங்கம் என்னை தனியாக கூட்டி சென்று மனோஜிற்கும் அவரது மைத்துனருக்கும் இடையே சின்ன சண்டை என்றும், நான் கோவிலிருந்து வெளியே வருவதற்குள் ஒருவருக்கொருவர் கீழே புரண்டுக்கொண்டு கீழே கிடந்தார்கள். ஒருத்தருக்கொருத்தர் தள்ளி விழுந்துவிட்டார்கள் போல் இருக்கு, நாங்கள் போனதும் விலக்கிவிட்டு நகர்த்தினோம். மனோஜ் படுத்தவர் எழுந்திருக்வில்லை. எழுந்திருக்க சொன்னோம். உட்கார்ந்தவர் மீண்டும் விழுந்துவிட்டார் என்று என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. ராமலிங்கம் என்னிடம் மேற்சொன்னவாறு போலீசாரிடம் வீடியோ வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் மேலே கூட்டி வரசொன்னதாகவும், பிறகு நானே காருக்கு போய் பார்த்ததாகவும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. MEDICO LEGAL MANUAL படி மருத்துவமனையில் காவல் நிலைய தகவல் பதிவேடு மற்றும் விபத்து பதிவேட்டை பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். மனோஜை எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கூட்டி வந்து நான் அவரை பரிசோதனை செய்தது சம்பந்தமாக பதிவு எதுவும் செய்யவில்லை. நான் போலீசாரிடம் விபத்தில் காயமடைந்ததாக ராமலிங்கம் என்னிடம் சொன்னதை மறைத்து போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் அரசு தரப்புக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.